# விளக்கு

இதழ் 2

நவம்பர் 2001



உங்களுக்கும் தான்

20/=

### கவிதை

மு.மயூரன்
எல்லாளன்
கஜவதனி
வதனமோகன்

### கட்டுரை

ஆ.யதீந்திரா
ஜபார்

### விஞ்ஞானம்

மயிலோன்

### கதை

இலக்குமீ இளங்கோ

### நாடகம்

வி.கௌரிபாலன்

### அட்டைப்படம்

சி.கமலகாந்தன்

### கருத்தோவியம்

வாசுகி

## ஆசிரியர்கள்

த.வேலவன்
மு.மயூரன்

## ஓவிய ஒப்பனை

கு.சிவகுமார்

## தொடர்புகளுக்கு

ஆசிரியர்
'விளக்கு'
157, கடற்படைத்தள வீதி,
திருக்கோணமலை.

026-20309

*நீ பேசிக்கொண்டிருக்கும் ஒரு வார்த்தையோடு கூட எனக்கு உடன் பாடில்லை. இருந்தாலும் அதைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையைக் காக்க நான் சாகவும் சம்மதம்.*

● தேடு ● தெளிவு கொள் ● துணிந்து சொல்

வணக்கம்,

இரண்டாவது விளக்கு அச்சிதழாக மலர்கின்றது. முந்நூறு இதழ் வரை அச்சிட்டுள்ளோம். இன்னும் வளர்வோமா?

மனித இனம் தன்னுடைய நீண்ட வரலாற்றின் வழி நெடுகிலும் காலத்திற்குக் காலம் அகப்புறக்காரணிகளைப் பொறுத்து வாழ்க்கை முறைகளை, சமூக கட்டமைப்புகளை, கலாச்சாரங்களை உருவாக்கி வந்துள்ளது. ஒன்று மாறி ஒன்றாக, ஒன்றன் பின் ஒன்றாக இத்தகைய கட்டுமானங்களில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு தான் இருந்தது. எங்கள் சமூகத்திற்கு மட்டுமல்ல எந்தச் சமூகத்திற்கும் இது பொருந்தும். இக்கட் டுடைப்புகளும், மாற்றங்களும் என்றைக்கும் நிகழ்ந்தவண்ணமே இருக்கும். எங்கள் பாரம்பரியங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல.

எங்களுடையது என்பதற்காக எல்லாம் சரியென்று ஏற்றுக்கொள்வதோ, மற்றவர்களுடையது என்பதற்காக அனைத்தும் பிழை என்று சொல்லிக் கொள்வதோ பெரிய முட்டாள்த்தனம்.

காலம், பிரதேசம், காலநிலை, அறிவு வளர்ச்சி என்பவற்றை அனுசரித்து எந்தக்கலாச்சாரம் எங்களுக்கு பொருத்தமானது என்று தெரிவு செய்வதும் இல்லாவிட்டால் மீளுருவாக்குதலும் நம் ஒவ்வொருவரினதும் கடமை.

எல்லாப்பிரச்சனைகளுக்கும் தீர்வு, பொதிகளிலோ அல்லது விதிகளிலோ இல்லை. பிரச்சனைகள் தீர, தேவை உடனடியாக ஒரு மாற்றுக் கலாச்சாரம்.

பிரசாரங்களுக்கு அடிமையாகமல் வாழ்க்கையை, உலகினை விமர்சன பூர்வமாக அணுகத்தெரிந்த ஒவ்வொருவரும் இதனைச் சொல்வார்கள்.

மாற்றுக் கலாச்சாரத்தின் முதல் படி விடுதலை. இது ஆயுதத்தால் மட்டுமல்ல மாறாக அன்பினால், மனிதாபிமானத்தால் ஏற்படுவது. உலகின் ஒவ்வொருவரும் விடுதலைப் பெற்றால் சமூகம் நாளை மகிழ்ச்சியாய் மலரும்.

பெண்கள் விடுதலை பெறட்டும், சிறுவர் விடுதலை பெறட்டும், முதியோர் விடுதலை பெறட்டும், தொழிலாளர் விடுதலை பெறட்டும். அன்று மண், மனித இனம் மட்டுமல்ல இந்த பிரபஞ்சமே விடுதலை பெறும்.

இதற்காக எழப்போகும் கைகள் வேறு யாருடயதும் அல்ல.

- ஆசிரியர் -

# கலையும் சமூக மாற்றமும் - ஆயதீந்திரா-

"SEXUAL TABOO" வை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதை எழுதியாயிற்று. எனக்கும் நல்ல கதையொன்று எழுதிவிட்ட திருப்தி. ஆனால், "இதெல்லாம் ஒரு கதை" அபசுரமாக ஒலித்தது அதைப்படித்த எனது நண்பனின் குரல். அந்தோ நான் சிறந்தது என நம்பிய கதை குப்பைத்தொட்டியில். இதற்கும் மேலாக நண்பன் கூறியவையே எனது சிந்தனையைக் கிளறியது. நண்பன் "எங்களுடைய மண்ணிலிருந்து வரும் படைப்புக்கள் நேரடி அரசியல் பிரச்சனைகளைப் பிரதிபலிக்க வேண்டும்.(கதையெண்டால் அதில் ஒரு சென்றிப் பொயின்ட் இருக்கவேன்டும், ஐரன்றி வரவேணும்) சமூக மாற்றத்திற்கு வித்திடவேண்டும். சமூக மாற்றத்திற்கு பயன்படாத எவையும் சிறந்த கலையாகாது." எதை அடிப்படையாகக் கொண்டு இவனால் இவ்வாறு கூற முடிகின்றது என்ற கேள்விதான் எனக்குள் எழுந்தது. ஏனெனில் எழுத்தாளர்கள் எதிர்பார்ப்பது வரலாற்றில் மிகமிக அரிதாகவே நடந்திருக்கின்றது. பின்னர் ஆழமாக சிந்தித்த போதுதான் புரிந்தது அவன் கூறியதின் மூலஊற்று எதுவென்பது. அவன் ஒரு வரட்டு மார்க்சியவாதி. மார்க்சியத்தின் பயன்பாடு என்னவோ, அதுவே கலையின் பயன்பாடு என்று நினைப்பவன். இது கலை பற்றிய ஒற்றைப்பரிமாணப்பார்வை. கலைக்கு ஓர் சமூக முக்கியத்துவம் உண்டு என்ற மார்க்சிய கருத்தியலை தவறாக விளங்கிக் கொண்டதன் விளைவே இவையெனலாம். உண்மையில் மார்க்சிய மூலவர்களிடமேயே இவவாறானதொரு பார்வை இருந்ததில்லை மார்க்ஸ், ஏங்கெல்ஸ் என்போர் சேக்ஷ்பியர், தாந்தே, கெதெ, போன்றவர்களிடம் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததாக அறிய முடிகின்றது. இவர்களது படைப்புக்கள் எவையுமே சமூக மாற்றத்திற்கோ வர்க்க புரட்சிக்கோ வித்திட்டவைகள் அல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கலையால் சமூகத்தை மாற்றியமைக்க முடியுமென வாதிப்போருக்கு லூசூன் (சீனப் புரட்சி இலக்கியத்தின் தந்தை) இவ்வாறு கூறுகின்றார். "எல்லா இலக்கியமும் அதன் சூழலினால் உருப்பெறுகிறது. இலக்கியம் உலக விவகாரங்களில் செல்வாக்கு செலுத்த முடியுமென்று கலாவித்தகர்கள் எண்பிக்க விரும்புகின்றார்கள் ஆனால் உண்மை வேறாக இருக்கின்றது.அதாவது அரிசியல் முதலில் வருகின்றது. கலை அதற்கேற்ப மாறுகின்றது. உங்கள் சூழலை கலை மாற்ற முடியும் என்று நீங்கள் கற்பனை பண்ணினால் நீங்கள் கருத்து முதல்வாதி போல் பேசுகிறீர்கள். எழுத்தாளர்கள் எதிர்பார்க்கும் நிகழ்வுகள் அரிதாகவே நடக்கின்றன. (Selected works of luhsun vol-III) இதனையே U.R. அனந்த மூர்த்தி (கன்னட அறிவுஜீவி , இலக்கிய வாதி) சற்று மாறுபட்ட வகையில் கூறுகின்றார். எழுத்துக்களால் எதுவும் செய்ய முடியாது போராட்டம் தான் முடிவு. அக்கிரமங்களுக்கு எதிரான போராட்டம் இதைச் செய்ய முடியாதவர்கள் எழுதலாம்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களுமே கலை, சமூக மாற்றத்தில் நேரடியாக பங்கு கொள்வதில்லை என்பதையே எமக்கு உணர்த்துகிறது. இவற்றை எமது சூழலோடு கூட பொருத்திப் பார்க்கலாம். இன்று எம்மத்தியில் இனமேலாதிக்கம், ஆணாதிக்கம், சாதியம் என எத்தனையோ வகையான ஒடுக்குமுறைகள் வேர்கொண்டிருக்கின்றன. இவற்றை எதிர்க்கும், இவற்றின் அசிங்கங்களை அம்பலப்படுத்தும் எத்தனையோ படைப்புகளும் (கவிதை, நாவல், சிறுகதை, நாடகம்) எம்மத்தியில் உலவுகின்றன. ஆனால் இவ்வகையான படைப்புகள் மேற்குறிப்பிட்ட ஒடுக்குமுறைகளில் ஏற்படுத்திய மாற்றம் என்ன? பூச்சியமே பதில். ஆகவே இங்கு அனந்தமூர்த்தி கூறுவது போன்று எல்லாவற்றுக்கும் போராட்டம்தான் தீர்வு சில வேளைகளில் போராட்டங்களுக்கு இலக்கியம் உந்துசக்தியாக இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. உண்மையில் கலையின் பயன்பாடு பற்றி கூறுவதானால் ஓர் சிறந்த கலைப்படைப்பு எம்மை உணர்வு ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கிறது. சமூகம் பற்றிய மதிப்பீட்டை தருகின்றது.

வாழ்வு பற்றிய புதிய பரிமாணங்களை முன்வைக்கின்றது. வாழ்க்கையை விமர்சனபூர்வமாக அணுகும் எமது ஆற்றலை கூர்மைப்படுத்துகின்றது இதுவே கலையின் பணியாகும்.

கலையின் பயன்பாடு பற்றி மார்க்சியத் திறனாய்வாளர் “டேவிட் கிறெய்க்” குறிப்பிடும்போது, தொடர்ச்சியான கலை அனுபவங்களினாலும் அதனோடு இணைந்து செயற்படும் வேறு அம்சங்களினாலும் ஏதாவது செய்யவேண்டும் என்ற உணர்வினை நாம் பெறுகின்றோம் அல்லது குறைந்தபட்சம் இனிச்செய்யவேண்டியது என்ன என்ற கேள்வியையாவது எமக்குள் எழுப்புகின்றோம். ஒரேயொரு காரணி மட்டும் நம்மைச் செயலுக்குத் தூண்டுவதில்லை. நாம் செயற்படும் போது நமது முழு ஆளுமையும் அதில் சம்பந்தப்படுகின்றது. இலக்கியம் நமது அனுபவத்தை விசாலப்படுத்துவதன் மூலமும் ஒழுங்கு செய்தலின் மூலமும் நமது ஆளுமையை உருவாக்க அல்லது மீள்ஒழுங்கமைக்க உதவுகின்றது என்கிறார் டேவிட்கிறெய்க் (Marxistson Literature).

## எழுதப்போகிறீர்களா?

**நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவுதான்,**

**ஏதாவதொரு காகிதத்தில் உங்கள் படைப்பினை எழுதி**

**ஆசிரியர்,**

**விளக்கு,**

**157, கடற்படைத்தள வீதி,**

**திருக்கோணமலை.**

**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்**


விளக்கு ,எந்தக்கொள்கைக்கோடுகளைக்கொண்டும் ஆக்கங்களை தெரிவு செய்வது கிடையாது.யாரும் எதையும் எழுதலாம். கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாவர். விமர்சனங்கள் வந்தேயாக வேண்டும். விவாதங்கள் நடந்தேதீர வேண்டும்.

# சீதா பேசு

In English - Bina Agarwal
தமிழில் – மு. மயூரன்

சீதா பேசு....
அந்தக் கதையின் உன்னுடைய பக்கத்தை பேசு....
மற்றபடி,
எங்களுக்கு நன்றாகவே தெரியும்
ஏனைய பக்கங்கள் எல்லாமே!

ஓர் இளவரசனுக்கு உன்னைக் கட்டிக்கொடுத்தான்
உன் அப்பன்.
"கணவனின் கைகளில் வில்லைப்போல்
பணிந்திரு"
சொல்லி அனுப்பினான்.
உனக்கு தெரியாதா
மாய வில்லையேஉடைத்தெறிந்தவ னல்லவா
அந்த
ராமன்?



எல்லோரும் சொன்னார்கள்
"இலட்சியப் புதல்வி நீதானம்மா"
நீயாய்த் தேர்ந்தெடுத்தாய்
கணவனையும், கூடவே
நாடு கடத்தப் படுதலையும்,
காடு தந்த கஷ்டங்களையும்,
பலாத்காரக் கடத்தலையும்,
அதன் பின் .......
நீ
தள்ளிவைக்கப்படுதலையும்.

கனலும் தீ நாக்குகளிடையே உனக்கு
"கற்புப் பரீட்சை"
வஞ்சிக்கப்பட்டவளுக்கு வஞ்சனை
மறுபடி ஒரு முறை.
அந்த அக்கினி கொழுந்துகளுக்கு
மலர் வனமாய் மாறத்தெரியுமா
உன்
உயிரை ஒரு முறை உருக்கிப்பார்க்காமல்?

எல்லோரும் சொன்னார்கள்
"இலட்சியப்பத்தினி நீதானம்மா"

அவனை நீ எதுவுமே கேட்டதில்லை.
உன் கதையை எழுதிய கவிஞர்கள் சொன்னார்கள்,
"அவளுக்காய் செவிசாய்க்குமளவுக்கு
பெண் ஒன்றும்
அவசியப் பிரஜையே அல்ல"

ராமாயணம்!
அடிவாங்குவதற்காகவே அதில் சேர்க்கப்பட்ட
அடிமை நீ.
எப்போதேனும் உனக்கு பெருமை சேர்க்குமா
அந்த அமர காவியம்?


இதுவரை இந்தப் புலவர்கள்
சவால்களே இல்லாமல்
வசனங்கள் எழுதினார்கள்
வஞ்சகத்தோடு

சீதா பேசு ... ...

விளையாடும் வேளையில்
மாய வில்லை
ஒற்றைக்கையால் ஒதுக்கிவைக்க
யாரால் முடியும்?

இந்த உலகத்தையே
ஒற்றைச்சொல்லால் ஆணையிட
யாரால் முடியும்?

எப்படியம்மா இவர்கள் உன்னை
மௌனமாக்கினார்கள்?



## எதைப்பற்றியும் பேசலாம்.

-ஜபார்-

எதைப்பற்றிப்பேசலாம் என்ற கேள்விக்கு மிகத்தெளிவாக பதில் வழங்குவதானால் எதைப்பற்றியும் பேசலாம் என்பதாகவே அது இருக்கும். அவ்வாறெனில் எதைப்பற்றி பேசலாம்?. இயற்கையைப் பற்றி பேசலாம், உலகத்தைப் பற்றி பேசலாம், இன்னும் மனிதர்களைப்பற்றி, அவர்களின் வரலாற்றைப்பற்றி, அவர்களின் அறிவுப்பற்றி, படைப்புத்திறனையும் படைப்புக்களையும் பற்றி, அதன் கூறுகளில் சிலவான கலை மற்றும் இலக்கியம் பற்றி, இன்ன பிறவென எதையோவெல்லாம் பற்றி நிறையவே பேசலாம். ஆயினும் பேசுவதற்கு குறைந்த பட்சமாவது அறிந்திருக்க வேண்டும். அறிந்திருத்தல் என்பது வேறொன்றுமல்ல. ஒரு தொடர்ச்சியான பயிற்சியும் செயற்பாடும் மட்டுமே. அது என்னவென்று பேசலாம். வாசித்தல், கிரகித்தல், பரிமாறல், விவாதித்தல், சிந்தித்தல், வெளியிடல் அல்லது படைத்தல் என ஒரு சுருள் வட்டமாய் ஓரிடத்தில் நின்று போகாத தொடர்ச்சியான செயற்பாடு தான். எனில் எதைப்பற்றியும் பேசலாம்.

நம்மிடையே பேசத்தெரிந்தவர்கள் நிறையவே உள்ளனர் ஆயினும் மிகச்சிலரே பேசுகின்றனர். இன்னும் சிலர் பேசத்தயங்குகின்றனர், பலர் பேசவதேயில்லை. பேசாதவர்கள் தமக்குப்பேசத்தெரிந்த துறையை மேலதிகமான தகமையாகவும் சுயஅடையாளத்தைப் பெரிதாக்கும் பெறுமானமாகவும் மட்டுமே கருதுகின்றனர். இவர்கள் பேசத்தொடங்கினால் ஏராளமான விடயங்கள் நமது தலைமுறையினருக்குக் கிடைக்கும். ஆகவே இவர்களை பேசவைக்க வேண்டிய முதற்கடமை நமக்குள்ளதாக நீங்கள் கருதவில்லையா? நம் முன்னுள்ள கேள்வியென்னவெனில் இவர்களைப் பேசவைப்பது எப்படி? ஆர்வமுள்ளவர்களால் மட்டுமே அது முடியும். ஆர்வமுள்ளவர்களுக்கு அழைப்பிதழ் தேவையில்லை என்பார்கள். ஆகவே ஆர்வமுள்ளவர்கள் அடிக்கடி சந்திப்பதன் மூலம் பேசத்தெரிந்தவர்களை ஒவ்வொருவராகவெனும் பேச வைக்கலாம். அவ்வாறெனில் ஆர்வமுள்ளவர்களின் சந்திப்பு ஆரம்பமாவது எப்போது? சரி. இன்னும் பல விடயங்கள் பற்றி அடுத்தடுத்து பேசலாம்.

# வாழ்வுறையும் தெய்வத்திவள்

வி.கௌரி பாலன்

அன்னை ஸ்ரீ சாரதாதேவி விரிவான வாழ்கை வரலாறு எனும் நூலைத் தழுவி எழுதப்பட்ட இந் நாடகமானது சாரதாதேவி அவர்களின் சில ஆளுமைகளை கவன ஈர்ப்புச் செய்கிறது. சாரதாதேவி அவர்கள் இன்று ஒரு வழிபாட்க்குரியவராக மாத்திரமே கவனிக்கப்படுகிறார் ஆனால் இவர் வாழ்ந்த காலத்திடுல் தான் வாழ்ந்த சமுகத்தின் வரட்டுத்தனங்களையும் கட்டுப்பாடுகளையும் ஒரு புரட்சி என்று அறியாமலே மாறல்கள் செய்தார் இதனால் பல துன்பங்களை சந்தித்தார் அவற்றை தாய்மை எனும் தனது தனித்துவமான ஆளுமைப் பண்பு மூலம் எதிர் கொண்டார் வாழ்தல் மீதான புதிர்களையும் பிரச்சனைகளையும் கூர்மையான அவதானிப்பின் மூலம் தன் பிரச்சாரங்களில் தெளிவுபடுத்தினார் ஆளுமை மிக்க ஒரு பெண்மணியின் வாழ்வில் நடந்த சில சம்பவங்கள் மூலம் இந்நாடகமானது அவரது தனித்துவமான பண்புகளை அடையாளப்படுத்துகிறது.

## காட்சி-1

(திரை- பாரதியார் மகா சக்தி வாழ்த்து பின்னணியில் இசைக்கத் தொடங்க திரை மெல்ல விலகத் தொடங்கும் அரங்கின் நடுவில் காளியின் படம் இருக்கும் மறுபுறம் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் படமும் இருக்கும் அது பின்னர் பயன்படுத்தப்படும் இப்போது காளியின் படமே அவைக்குத்தெரியும் படம் ஒரு கதிரையிலோ(or) ஸ்ருலிலோ இருக்கலாம். ஸ்ரீ ராமக்கிருஷ்ணர் ஆழ்ந்த தியானத்தில் காளியின் படத்திற்கு முன்னால் அமந்திருப்பார் ஆண் சீடர்கள் சிலரும் பெண் சீடர்கள் சிலரும் அங்கும் இங்கும் தீவிரமாக அலைந்து ஒரு பெரியபூசைக்கான ஆயத்தத்தில் இருப்பார்கள் பூசைக்கான பாத்திரத்தை கழுவுதல் பூப்பறித்தல் மாலை கட்டுதல் நைவேத்தியங்கள் செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருப்பார்கள்-பாடல் முடிய திரை முற்றாக விலகி இருக்கும்)

***பாடல்***-தவத்தினை எளிதாப் புரிந்தனள் யோகத்  
தனிநிலைத் ஒளியெனப் புரிந்தாள்  
சிவத்தினை இனிதாப் புரிந்தனள் மூடச்  
சித்தமும் தெளிவுறச் செய்தாள்  
பவத்தினை வெறுப்ப அருளினள் நானாம்  
பான்மை கொன்று அவள்மயம் புரிந்தாள்  
அவத்தினைக் களைந்தாள் அறிவென விளைந்தாள்  
அனந்தமா வாழ்க இங்கவளே.

(பாரதியார் மகாசக்தி வாழ்த்து- அன்னை ஸ்ரீ சாரதாதேவி விரிவான வாழ்க்கை வரலாறு பக்கம்-425)

(பாடல் முடிய அன்னை ஏதாவது ஒருபகுதியில் இருந்து அரங்கிற்குள் வருவார். அன்னை வர்ணச்சேலையுடுத்தி, நெற்றியில் திலகமிட்டு, கம்மல், வளையல்கள் அணிந்திருப்பார்.கையில் ஏதாவது ஒரு பொருளுடன் வந்து ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அருகில் அமர்வாள்)

ஸ்ரீ ராமகிருஷ்ணர் : (நிஷ்டை கலைந்து அன்னையைப்பார்த்து) அம்மா உன் முகம் ஏன் இவ்வளவு சோர்வுற்றுக்கிடக்கிறது?

அன்னை : நாபகத்தில் நீங்கள் இருந்தும் தனிமை என்னை வாட்டுகிறதே சுவாமி........

ஸ்ரீ ராமகிருஷ்ணர் : (எழுந்து கொண்டே) யோகின்மா..........,கோலப்மா....... குருக்களின் மனைவிமார் என எவ்வளவோ பேர் இருந்தும் கூண்டுக்கிளிபோல் நாகபத்துக்குள்ளேயே அடைந்துகிடந்தால் நான்என்னசெய்வதாம்?(அன்னையும் எழுந்து கொள்கிறாள்)

அன்னை : ஒதுங்கியிருப்பது என்னுடன் கூடப்பிறந்ததாக இருக்கிறதே .......

ஸ்ரீராமகிருஷ்ணர் : அதற்கு நான் என்ன செய்ய வேண்டுத் என்கிறாய் தாயே?

அன்னை : (மிகுந்த துயருடன்) பிள்ளைப்பேறில்லாத பெண் எந்த மங்கள காரியங்களும் செய்யத்தகுதியற்றவள் எனப்பலர் சொல்ல கேட்டிருக்கின்றேன். குருதேவா.........ஒருபிள்ளைகூட அம்மாஎன்று அழைப்பதற்கு என் தலையில் எழுதவில்லையா?

ஸ்ரீ ராமகிருஷ்ணர் :(அட்டகாசமாய்ச்சிரித்து ) ஹா......ஹா...... ஒரு குழந்தை அம்மா என்று அழைப்பதையா உன் மனம் அவாவுகிறது? பின்னாளில் ஆயிரம்......... ஆயிரம்........ குழந்தைகள் அம்மா......... அம்மா......... என்று அழைக்கும் குரலால் உன்காதுகள் அடைக்கப்போவதை நீ உணரவில்லையா?

அன்னை : சுவாமி, இவள் சாதாரண கிராமத்துப் பெண்

ஸ்ரீ ராமகிருஸ்ணன் : (மீண்டும் சிரித்தல்) ஹ ஹா அம்மா, மைத்திரேயி என்னும் ஆண்மீக சாதகியார் தன் கணவரிடம் என்ன கேட்டார் தெரியுமா?

அன்னை : தெரியும் சுவாமி. மரணம் இல்லா பெரு நிலையை இந்தச் செல்வத்தால் அளிக்க முடியாதென்றால் அது எனக்கு எதற்கு? மரணம் இல்லா பெருநிலையை அளிக்கக் கூடிய செல்வத்தை எனக்கு தாருங்கள் என்று கேட்டதாக கூறியிருக்கிறீர்கள் சுவாமி.

ஸ்ரீ ராமகிருஸ்ணன் : அன்னையே, உன்னுடன் கூடபிறந்தவர் இறந்த போது உன் அன்னையும் தந்தையும் எவ்வளவு வேதனைப்பட்டனர்? ஏன் நீயே எவ்வளவு துவண்டு போனாய் என்பதை ஒரு கணம் சிந்தித்துப்பார் (காளியின் படத்தைப்பார்த்து) அம்மா, இவளது மனதில் இருந்து காமத்தை வேரோடு களைந்து விடு (பின் அன்னையைப்பார்த்து) அம்மா உனக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்? நாய், நரிகளைப்போல் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதும் பிறகு வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வதும் எதற்காக? உனக்கு தெறியாதா என்ன? எதற்கு இதெல்லாம்? இவை எதுவும் இன்றியே நீ மகாராணி போல் இருக்கிறாய் வாழ் நாள் முழுவதும் இப்படியே இரு!

அன்னை : (பெரு மூச்சுடன் தனக்கு தானே) என் மனத்தவிப்பை நான் எவ்வாறு உரைப்பேன்.

ஸ்ரீ ராமகிருஸ்ணன் : (அன்னையின் முணுமுணுப்பை கேட்ப்படி தன்பாட்டில்) முதல் குழந்தைப் பிறந்ததும் ஒரே அமர்க்களம். ஆனால் அந்தை குழந்தை இறக்கட்டும், கண்ணீரும் கம்பலையும் தான் மிச்சம்.


அன்னை : (நறுக்கென்று) என்ன? பிறக்கின்ற குழந்தைகள் எல்லாமா இறந்து விடுகின்றன?

ஸ்ரீ ராமகிருஸ்ணன் : (குதுகலமாக கூவுகிறாள்) ஐயோ! அம்மா! நல்ல பாம்பின் வாலை அல்லவா மிதித்துவிட்டேன்! எளிமையானவள், வெகுளி என்றெல்லாம் நினைத்து இருந்தேனே! ஆகா ! ஆகா! இவளோ என்றால் எப்படி நறுக்கென்று கேட்கிறாள்!


(அன்னையும் ஸ்ரீ ராமகிருஸ்ணரும் நகர்ந்து காளியின் படத்துக்கு அருகில் செல்லுதல் - பின்னணியில் பாரதியின் மகாசக்திப்பாடல் முன் இரு அடிகளும் ஒலித்து ஓயும்)

[மிகுதி அடுத்த இதழில் தொடரும்]





பிடிக்காத உறவுகள்,
பகட்டான பகல்கள்,
இனிக்காத இரவுகள்,
கனவான கனவுகள்,
போலியான புன்னகை,
போதாத சுதந்திரம்,
எட்டாத எண்ணங்கள்,
கிட்டாத வெற்றிகள்,
மறக்காத நினைவுகள்,
மாறாத காயங்கள்,
வெறுப்பான சமூகம்,
விருப்பற்ற சம்பிரதாயம்,
வீணான சந்தேகம்,
விழலான சந்தோசம்,
இன்னும் எத்தனையோ.........



அகம் முதல் அரசியல் வரை
என் சம வயதை
சறுக்கி விழுத்தியதாக
வரலாறு சொல்லும்.

நியாயமாய் பேசுவோம்.
வயதுக்கும் கருத்துக்குமிடையே
முடிச்சுகள் வேண்டாம்.
சரியாகவிருந்தால்
தட்டிக் கொடுங்கள்!
அதுவே பிழையானால்
தன்மையாய்ச் சொல்லுங்கள்!

எதிர்ப்பால் மனிதர்கள்
எப்படியும் பேசட்டுமே.........
அரசியல், இலக்கியம்,
ஆன்மீகம், பாலியல்,
காதல், காமம்
எல்லாம் பேசட்டுமே..............
உடலிலும் உடையிலும்
சின்னச் சின்ன வித்தியாசம்
அவ்வளவு தானே?



உங்கள் சுட்டுவிரல் பற்றி
சுற்றிக்கொண்டிருந்தால்
நாம் சுயம் இழக்கலாம்

நீங்கள் கண்டியுங்கள்
மீறினால் தண்டியுங்கள்
உங்கள் தடைகளே
சிலவேளைகளில்-எம்மை
தடம் புரள வைக்கும்
உங்கள் அறிவுரைகளே
அளவு மீறி-நாம்
புத்தகம் வெறுக்க
புதுக் காரணமாகலாம்.

குட்டும் போது குனியவும்-நீங்கள்
பேசும் போது பேசாமல் இருக்கவும்
நாங்கள் தயார்,
குட்டவும் பேசவும்
உண்மையான காரணம்
உங்களிடம் இருந்தால்... ... ...
நாங்கள் தயார்.

உங்கள் சுவடுகளையே
எங்கள் பாதங்கள்
புதுப்பிக்கும்.
புதுமை வேண்டும்!
புரட்சி வேண்டும்!
எங்கள் சுவடுகளாவது
அப்படியே இருக்கட்டும்
அடுத்த தலைமுறைக்கு
எங்கள் சுவடுகள் எதற்கு?




எங்கள் அன்பின் அன்பர்களே!
வாடிக்கையாளர்களே!
முத்தான திருமலையில்
'முபீதாஸ் லேடீஸ் கோணர்'
பூவையர் உடலுக்கேற்ற
புதுவித ஆடைகளுக்கு
'முபீதாஸ் லேடீஸ் கோணர்'
மிலேனியத்தில் மின்னலடிக்கும்
மிகச்சிறந்த சாரி வகைகளுக்கு
'முபீதாஸ் லேடீஸ் கோணர்'

திருவிழா வைபவங்களா?
மங்கள மாங்கல்யமா?
'முபீதாஸ் லேடீஸ் கோணர்'
'முபீதாஸ் லேடீஸ் கோணர்'
இல.15, 3ம் குறுக்குத்தெரு,
திருக்கோணமலை.
தொ.பே:026-20440

ஆண்களின் பெருமைமிகு
அனைத்து ஆடைகளுக்கும்
'முபீதாஸ் ஜென்ஸ் கோணர்'
இல.02, 3ம் குறுக்குத்தெரு,
திருக்கோணமலை.
தொ.பே:026-20440

தனித்துவத்தில் தன்னிகரற்ற
'தனித்துணியகம்'
"நியூ முபீதாஸ்"
விசேடமாக, பிளவுஸ்மெற்றீரியல்,
கவுன்துணி, சேட்டிங், சூட்டிங்,
கேட்டிங் என அனைத்தும்
"நியூ முபீதாஸ்"
இல.11, 3ம் குறுக்குத்தெரு,
திருக்கோணமலை.
தொ.பே:026-24380


விளக்கின்மீது நீங்கள் செய்யும் விமர்சனங்கள்,வாழ்த்துக்கள் அனைத்தும் வெறும்பேச்சாக மட்டும் இருக்கவேண்டாம். விமர்சனங்கள் எழுத்துமூலமாகவோ அல்லதுதொலைபேசிமூலமாகவோ செய்யப்பட்டால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# இருளிலே ஒரு குரல்

இலக்குமி இளங்கோ

சிதம்பரத்தின் தெருக்களிலே இருக்கும் வரட்சிதான் அன்று வானத்திலும்; ஒளியே இல்லை. இருட்டு! நட்சத்திரங்களைக் கூட மெல்லிய முகில்ப் படலம் மறைத்துவிட்டது. பிறைச்சந்திரன் மறைந்து வெகு நேரமாகிவிட்டது.

நான் அண்ணனுடன் நடராசர் கோவிலின் கல்பதித்த வீதியில் உட்கார்ந்திருக்கிறேன். அண்ணா பெரிதாக ஆலாபனை பண்ணி "பனித்த சடையும்.." என்று ஆரம்பித்தார். எனக்கு டப்பா சங்கீதத்தைக் கூட முழுசாகரசிக்க முடியாது. கர்நாடக இசை எங்கே புரியப்போகிறது. சலிக்கும் உள்ளத்தை மீண்டும் நம் திருக்கோணமலை மீது வந்து படியும் படிக்கு நழுவ விட்டபடி அண்ணாவின் தேவாரத்தைக் கேட்டேன்.

பெரிய கரும் பூதத்தைப் போல மேற்குத் திசை இராஜ கோபுரம் வானத்தின் இருட்டிற்குள் நிமிர்ந்து அழுந்தி நிற்கின்றது. நடராசரின் வாயில் காக்கும் பரதேசி ஒருவன் எங்களருகே குடு குடுவென்று ஓடி வந்து அண்ணாவின் இசையை ரசிக்க உட்கார்ந்தான்.எங்கே கூட்டம் கூடிவிடப்போகிறதோ என்று எனக்குப் பயமாகப் போய்விட்டது. அண்ணா ஒரு குஷிப்பேர்வழி. இல்லாவிட்டால் ஹைஸ்கூல் தமிழ் வாத்தியராக வேலை பார்க்கிறவர் கோயில் வீதியிலே உட்கார்ந்து சமய சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாமல் பாட ஆரம்பிப்பாரா என்ன ?

சின்னம்மா, சந்தானத்திற்கு மாலை கொடுக்கப் போனவர் திரும்பிவர நெடு நேரமாகும் போலிருந்தது. பூசை ஆக்கித்தான் வருவார் என்று முடிவுகட்டினோம். அண்ணா "இது தான் காபி ராகம்" என்று இழுக்க ஆரம்பித்தார். "பனித்தசடையும்" முடிந்த நேரமே எனக்குத் தெரியாது. "ஓஹோ" என்று கேட்டுக்கொண்டிருந்தேன்.

"ஸார் இங்கே இருக்கியளா ?" என்றது ஞானத்தின் குரல். அண்ணா ஆலாபனையை முடித்துக்கொண்டு "வா, வா உட்காரு..... எங்கே அம்மாவை விட்டுட்டு வந்துட்டே" என்றார்.

"நான் இத்தாண்டே மேல்வீதிக்கு அவசர ஜோலியாப் போறேன் ஸார். நீங்களும் சிவமும் கீழ்க்கோபுர வாசலிலே இருக்கதா நெனைச்சுண்டில்ல அம்மா தேடிக்கிட்டு போவுது ...... அது இந்நேரம் வீட்டுக்குப் போயிருக்கும் ஸார்" என்றபடி ஞானம் விடைபெற்றுக் கொண்டான்.

ஞானம் அண்ணாவின் வீட்டுக்குப் பக்கத்திலேயே வசிக்கிறவர். அவருக்கு ஒரு தாத்தா இருந்தார். நான் சிதம்பரத்துக்கு போன முதல் நாளே சிநேகம் பூண்டு விட்டேன். அவருக்கு என்மீது அளவு கடந்த பிரியம். "சிவம், சிவம்" என்று உயிரை விடுவார். ஆவரிடமிருந்து தான் சிதம்பரத்துக் கோவிலின் சரித்திரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.அண்ணா, சின்னம்மா, நான் எல்லோருமே அவரை "தாத்தா" என்று தான் கூப்பிடுவோம். ஞானத்தின் தாத்தா ரெட்டிமார் குலத்தைச் சேர்ந்தவர். வயதின் முதிர்ச்சியால் தளர்ச்சியடைந்திருந்தாலும் இனந்தெரியாத வசீகரம் ஒன்று அவரது உடல் முழுவதும் மின்சாரம் மாதிரிப் பரவியிருக்கிறது. ஆவர் என் தலையை வருடியபடி இளங்கோவடிகளின் திறமையைப் பற்றியும், உயர்ந்த கவிதைப் பண்பைப் பற்றியும்தடுமாறும் குரலில் சொல்லிக்கொண்டேயிருப்பார். நான் கேட்டுக்கொண்டேயிருப்பேன். அவருக்குத் தமிழறிவு அதிகம். அவர் பேசும் போது நான் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டியதேயன்றி, அவர் கேள்விபோட்டால் பதில் கூடப்பேச முடியாது. ஏனென்றால் அவர் சொல்லும் விஷயங்கள் அவ்வளவும் எனக்குப் புதிதாக இருக்கும்.

நான் அவரோடு பழகியது ஒரே வாரம்தான். அதற்குள் அவரைப் பொல்லாத மரணம் கௌவிக்கொண்டு போய்விட்டது.

ஞானம் முதலியவர்களுக்கு அவர் நெடுகால உறவுக்காரர். கொஞ்சம் பளுவாகவும் இருந்திருப்பார். முதுமையையே மரணத்தின் வெற்றிக்கு மெதுவான வேகம் என்று தானே சொல்லவேண்டும் ? ஒருவருக்கும் அவரது மரணம் சோகத்தை அளிக்கவில்லை.

ஆனால் எனக்கு அவர் ஒரே வாரத்துக் குழந்தை .................... நான் திருட்டுத் தனமாக அழுதேன். சிவஞானத்தின் தாத்தா இறந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது.

“ என்ன யோசிச்சுண்டிருக்கே ? .................... கிளம்பு” என்றார். அண்ணா தன் காபிராக ஆலாபனையுடன் ஒரு கீர்த்தனையையும் பாடி முடித்துவிட்டு.
நாங்கள் எழுந்து மேற்குக் கோபுரவாயில் வழியாக வெளியேறினோம். அவ்வளவு நேரமும் சங்கீத ரசனையில் அமர்ந்திருந்த பரதேசி, “ஐயா ஸாமி,ஸாமி” என்று பின்னால் தனது திருவோட்டை ஏந்தியபடி ஓடிவந்தான்.

அண்ணா “என்னப்பா... என்பாட்டைக் கேட்டுட்டு கேட்ட கடனுக்குப் பணமும் கேட்கிறாயா?” என்று சொல்லிக்கொண்டு சட்டைப்பையை துளாவினார்.

இதற்குள் ஒரு ஆசாமி “என்னா வாத்தியார் ஸார் ?” என்று அண்ணாவுடன் பேசுவதற்குக் குறுக்கிட்டார். அண்ணா ஒரு அரை ரூபா நாணயத்தை என்னிடம் தந்து “ சில்லறையாக்கி அரையணாவைக் கொடு” என்று கூறிவிட்டு வந்த ஆசாமியுடன் ஏதோ சுவாரஸ்யமாக பேச ஆரம்பித்தார்.

நான் எதிரிலிருந்த கடை வரிசையில் ஒன்றினுள் நுழைந்தேன். கடைக்காரன் கொஞ்சம் பிகு பண்ணிச் சில்லரையாக்கித் தந்தான். தாள்களும் நயா பைசாக்களுமாக சில்லரை இருந்ததால், நான் அரையணாவைப் பரதேசியிடம் கொடுத்து அனுப்பிவிட்டு மீதியைக் கடைமுகப்பிலேயே நின்று சரிபார்த்துக் கொண்டிருந்தேன். ஒன்றும் புரியவில்லை கையிலே சிதறிக்கிடந்த நாணயங்களைச் சிதம்பர சக்கரத்தை பார்த்த பேய் மாதிரி முழித்துப் பார்த்து மண்டையை உடைத்துக்கொண்டு அண்ணா நின்ற இடத்தை நோக்கி நடந்தேன்.

அங்கே அண்ணாவும் இல்லை, அந்த ஆசாமியும் இல்லை.

எனக்குத் திக்கென்றிருந்தது. எனக்கோ ஊரில் ஒரு மாதம் இருந்தும் தெருக்களில் நல்ல பரிச்சயமில்லை. வீட்டிற்கு ஒருமாதிரிப் போய்ச்சேரலாம். ஆனால் அண்ணா எங்கே போனார் என்றதில்தான் திகைப்பு. குடிமுழுகிவிடவில்லை. எப்படியும் அவர்வீட்டிற்குத்தான் வருவார் நாம் முதலில் போய்விடலாம் என்ற நினைப்போடு கிளம்பினேன்.

நடராஜர் கோவிலுக்கு வந்து போகும் போதெல்லாம் கீழ் வீதி வழியாகத்தான் வந்துபோவேன். மேல் வீதி விவகாரம் எனக்குத் தெரியவே தெரியாது. தெருக்களைப் பரிச்சயப்படுத்தி வைக்க எனக்கு ஆசையும் இல்லை. ஊரிலே புதுமை இருந்தாலல்லவா ஆசை வரும் அது கொழும்பா என்ன ? கோவிலைத் தவிர அங்கே பார்க்கிறதுக்கு வேறொன்றுமே இல்லையே

நான் கால் இழுத்த திசையில் ஊரைக்கரைத்துக் குடித்தவன் மாதிரி நடக்க ஆரம்பித்தேன். எங்கே வழி தப்பிற்றோ தெரியாது, திடீரென்று சுற்றிலும் இருள் மண்ட புழுதித் தெரு ஒன்றில் நடக்கிறேன் என்ற உணர்வுபட்டது.

அந்தத் தெருவுக்கு நான் அதற்கு முன் வந்ததே இல்லை.

நான் சட்டென்று நின்று சுற்றிலும் பார்த்தேன். ..................... ஏன் வரவில்லை ! அதற்கு முன் அந்த வீதிவழியாக ஒரு தடவை வந்திருக்கிறேன் !. ஞானத்தின் தாத்தாவை ஈமத்தில் ஏற்றுவதற்கு !............... நான் அப்போது நின்ற வீதி சுடலைக்கு நடுவே செல்லும் வீதி !.

எனக்கு உடல் பயத்தில் ஒரு கணம் ஆடிற்று ..................... உள்ளம் சுங்கான் சிதறிய கப்பல் மாதிரி ஒருகணம் தத்தளித்தது. என்னையறியாமல் இருட்டு கிடந்த சுடலையினுள் வெறித்துப்பார்த்தேன். அது என்ன ?......................

இருட்டினுள் ஏதோ ஆடினாற் போல் தோன்றியது. ..................... திடீரென்று ஒரு பற்றை சல சலத்தது. ..................... என் காலில் மோதியபடி வெள்ளை நாய் ஒன்று பாய்ந்தோடி எங்கோ மறைந்தது. என் கால்கள் கட்டுமீறி நடுங்கின......................

மனசை அறிவின் நிர்ப்பந்தத்திற்குள் இழுத்துப் பிணைத்து ஒன்றுமே நடக்காதது போல் பாவனை செய்தபடி திரும்பி நடந்தேன். ................... தூரத்தில் கடைத்தெரு வெளிச்சங்கள் நான் எவ்வளவு தூரம் மனிதவாடையை விட்டு விலகி வந்திருக்கிறேன். என்று அளந்து காட்டின. ................... நான் விறு விறுவென்று நடந்தேன.

பக்கத்திலும் பார்க்காமல் நிமிர்ந்தும் பார்க்காமல் வேகமாக நடந்தேன்.

யாரோ என்னைத் தாண்டி நடந்து சென்றாற் போல் சந்தடி கேட்டது. ரத்தம் பனிக்கட்டியாக உறையத் தலையைத் திருப்பிப் பார்த்தேன்.

பின்புறத்தில் சில அடிதூரம் தள்ளி, நடுத்தெருவில் வெள்ளையாக ஏதோ தெரிந்தது. மறுபுறம் மிருதுவாக ஒரு நடுங்கும் குரல் “சிவம்” என்றது....................

ஞானத்தின் தாத்தா !
நான் நடுங்கினேன் !

எனக்கு எப்படி அவ்வளவு மனோபலம் உண்டாயிற்றோ !.................... ஓடினேன் ..................... எதிரே என்ன வருகிறது என்று தெரியாமல் ஓடினேன். கடைத்தெருவிற்குள் நுழைந்து மனிதர்களின் கூட்டத்திற்குள் கலந்தேன். பின்னால் அந்த மயான வெளியிலிருந்து அதே குரல் “சிவம்” என்று கூப்பிட்டது மனித குரலின் ஓலம் அதையும் மீறித் தெளிவாகக் கேட்டது..................... வேகமாக நடந்தேன்.

உள்ளத்தின் .சக்தி விசித்திரமானது. நான் என்னையறியாமலேயே அண்ணா வசிக்கும் வீதியினுள் நுழைந்து விட்டேன்.மனம் நிம்மதியடைந்தது.

ஊச்சென்று உள்ளம் மீண்டும் எங்கோ பறந்தது. அந்த வீதியில் ஆள் நடமாட்டமில்லாவிட்டாலும் எனக்குப் பரிச்சயமானது என்ற தைரியம் நான் வீட்டு வாயிலை நெருங்கினேன். அந்த வாயிலில் நின்ற விளக்குக் கம்பத்தின் பல்ப் பழுதாகிவிட்டது. ....... நான் தட்டுத்தடுமாறியபடி இருட்டில் படிகளில் ஏறினேன்.

இருந்தாற் போல் பின் புறத்தில் இருந்து அதே குரல் "சிவம் சிவம்" என்று கூப்பிட்டது.

உடல் விறைத்தது..................... "வீல்" என்று அலற வாயெடுத்தேன். தோளில் குளிராக ஒரு கை விழுந்தது.

"என்னடா சிவம் ..................... உனக்குப் பின்னாலேயே வந்தேனே ..................... வழிதவறி சுடலை வரைக்கும் போயிட்டே ! போவேன்னு எனக்குத் தெரியும். என்னைக் கண்டுட்டு ஏன் ஓடினே ?" என்றார் அண்ணா.


டி.அஜித் ராம்பிரேமின் (தருமுசிவராமு) அவர்கள் 19.12.1958 அன்று எழுதிய கதை

---

## எங்களுடைய ஆடைக் கலாச்சாரம் எது?

- வாசுகி -

படித்துச் சிலிர்த்தது.




(நன்றி "பெண்" - தொகுதி 5 இல.2)

# உங்கள் ஆடைத் தெரிவுகளுக்கு

NAWAMILAS





## "நவாமிலாஸ்"

205, வடகரை வீதி
திருக்கோணமலை
026 - 22531
026 - 23209

# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க!

உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்குரிய விளம்பரப் பலகைகளை கண்கவரும் வர்ணங்களில் வரைந்து கொள்ள நாடுங்கள்

## ஜீவன் ஆர்ட்ஸ்

- விளம்பரப்பலகைகள்(Name Board)
- பிளாஸ்டிக் விளம்பரம்( PlasticBoard)
- பதாகை ( Banner)
- வாகன இலக்கத்தகடு(Number Plate)
- சினிமா ஸ்லைட் (Cinema Slide)
- ஸ்டிக்கர் வேலைகள்(Sticker Works)

## கணினி வடிவமைப்பு மூலம்......

- லேசர் பிரிண்டிங்(Laser Printing)
- கலர் பிரிண்டிங் (Colour Printing)
- ஸ்கானிங்(Scanning)

ஸ்கிரீன் பிரிண்டிங் மூலம் உங்களுக்குத் தேவையான அனைத்து அச்சுவேலைகளும் செய்து கொள்ள நாடுங்கள்.

26-E, Sea View Road,
Trincomalee.

# எழுதிப்பார் (வளரும் படைப்பாளிகளுக்கான பக்கம்)

"எழுதிப்பார்"

இந்தப்பகுதி வளரும் படைப்பாளிகளுக்கானது. அனுப்பப்படும் எல்லா ஆக்கங்களும் இங்கு வெளியிடப்படும். இது உங்கள் பயிற்சிக்கொப்பி மாதிரி. பயமில்லாமல் எழுதுங்கள். வசதிப்பட்டால் உங்களை மெருகூட்டுவதற்கான குறிப்புக்களையும் அறிவுறுத்தல்களையும் **"விளக்கு"** உங்களுக்கு வழங்கும்.

## வயிறு ஒன்று வாங்கினேன்.

(வீதியோரம், பாலியல் தொழிலாளி, அவள்குழந்தை, நான்)

கடைத்தெரு போனேன்.
தெருக்கடை ஓரமாய்
குங்குமம் இல்லாத ஒருத்தி
குழந்தை விற்கிறாள்

முகவரி கேட்டேன்
முந்தானை என்றாள்.
முழுப்பெயர் சொல்லவும்
முடியாதென்றாள்.
" வசிப்பிடம் வறுமை
வாழ்வதும் கடமை
வயிறு பிழைக்கச்செய்தேன் " என்றாள்.

வயிறு பிழைக்க செய்த தொழில்
அவள்
'வயிற்றைக்கழுவ' போதவில்லையாம்.
அதனால் இன்று
இரண்டு வயிறுகள் பசியோடு... ... ...
புரிந்தது,
அவள்
வயிறு வளர்ப்பதும்
வயிற்றை வளர்த்ததும்
ஒரே தொழிலில்தான்.
அதுசரி,
குழந்தையை விற்று
குங்குமம் வாங்குவாளா?
இல்லை - வேறு
முந்தானை வாங்கி
முகவரியை மாற்றுவாளா?
புரியாதவனாய்
அந்த
குழந்தை வயிற்றை வாங்கினேன்.
அதன்
வாழ்க்கையை வளர்க்கவும்
அவள்
வயிறு வளர்க்கவும்.

-சம்பூர். மு.வதனமோகன்-

## எஞ்சிய பெண்மை

எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு
காத்திருந்த பெண்மை
முடங்கிப் போனது
நிரந்தர இருளுக்குள்,
சீதனப் புதையல் தேடி ... ...

அந்தப் பெண் சுடரை
"பத்து லட்ச" பங்கருக்குள்தள்ளியது
திருமண அழைப்பிதழ்!
மீண்டும் அத்தீபம் சுடர
வேண்டுமோ சீதன எண்ணெய்

கண்ணிறைந்த நீரோடு
தூக்குக் கயிறுகளில் ஆடும்
பெண் வீட்டார் ஊஞ்சல்.

எதிர்பார்ப்புகள் மிதிபட்ட மண்ணில்
எஞ்சிய பெண்ணின் கதறல் ... ...
என்றோ ஒரு நாள்
எரிமலையாய் வெடிக்கும்

அன்று
மிதிக்க மிதிக்க மண் பார்த்த எம் பார்வை,
பொங்கிப் பொசுக்கும்
நெற்றிக்கண்ணாய் ... ...
தீச்சுவாலையுடன்!

- செல்வி.கஜவதனி கந்தசாமி-
கொழும்பு

# முள்ளை முள்ளால்... (ஹோமியோபதி:ஓர் அறிமுகம்)

**தொகுப்பு~மயிலோன்**

ஹோமியோபதி'என்றொரு மருத்துவமுறை இருப்பது உங்களுக்கு தெரிந்திருக்கலாம். அதனடிப்படையில் சிகிச்சை பெற்றவர்கள் அந்த இனிப்புக்குறுணல்களின் அதீத ஆற்றல்களைக்கண்டு அதிசயித்தும் போயிருக்கலாம். சரி,□மியோபதி முறையின் தனித்துவம்தான் என்ன?

"சாமுவேல் ஹானிமன்"
பிறப்பு – 04.10.1755
இடம் - ஜேர்மனி
தொழில் - ஆரம்பத்தில் அலோபதி மருத்துவர்
சாதனை - ஹோமியோபதி முறையினைக் கண்டுபிடித்தமை

வெட்டுதல்,கொத்துதல்,சூடுபோடுதல், கசக்கும்மருந்துகள்என்பவற்றை ஹானிமன் முற்றாக வெறுத்தார். மிருதுவான இனிப்பான சிகிச்சை முறைகளை கண்டறிய முற்பட்டார்.

ஹானிமன் கண்டுபிடித்த முக்கியமான உண்மை இதுதான்
ஒருமருந்துப்பொருளோ அல்லது வேறெந்தப்பொருளோ உடலில் எந்தநோயை உண்டாக்குகிறதோ அதேபொருள் மிகச்சிறிய அளவில் கொடுக்கப்பட்டால் தான் உருவாக்கிய அதே நோயை குணப்படுத்திவிடுகிறது!

ஹோமியோபதியில் நோயைப்பொறுத்தோ அல்லது ஒருகூட்டம் மனிதர்களைப்பொறுத்தோ மருந்துகள் அமைவதில்லை. மாறாக ஒவ்வொரு மனிதனதும் இயல்புகளைப் பொறுத்து அவருக்கான மருந்து தெரிவுசெய்யப்படுகின்றது.

ஒருவன் முழங்கால் வலியோடு வைத்தியரிடம் வருகிறான். ஊசிபோட்டுக்கொள்கிறான். போய்விடுகிறான். மீண்டும் வருகின்றான். வைத்தியரைப் பாராட்டி புதிதாய்வந்திருக்கும் மார்புவலிக்கு வைத்தியம் செய்கிறான். பின்பு,அதைவிட மோசமான வருத்தம் வருகிறது. அதன்பின் இறந்துவிடுகிறான்.

உண்மையில் முழங்கால்வலிக்கு செய்யப்பட்ட தவறான வைத்தியமே அதன்பின்வந்த அத்தனை நோய்களுக்கும் காரணம்.


மார்புவலியுள்ளவனுக்கு ஹோமியோபதிமருத்துவம் செய்யப்படுகின்றது. அவனுக்கு முழங்கால்வலி வருகிறது. பின் மீண்டும் ஹோமியோமருத்துவம். குணமடைந்துவிடுகிறான்.


ஆகவே

நோய்க்கு மட்டும் மருந்து செய்யாமல் ஆளுக்கும் மருந்து செய்து நோயின் ஆணிவேரை தேடிக்கண்டுபிடித்து அகற்றி விடுவதே இம்மருத்துவம் செய்த புரட்சி.

## ஆடாதோடையிலிருந்து ஹோமியோபதி மருந்து தயாரிக்கும் படிமுறைகள்




இப்படியாக 2 X, 3 X மட்டுமல்ல, 10 x, 100 x.... ஏன் 100,000 x வரைகூட மருந்துகளுண்டு

கரையாத பொருட்களுக்கு, மதுசாரத்திற்குப் பதிலாக, பால்ச்சக்கரை மாவுடன் அரைக்கும் செயன்முறை மேற்கொள்ளப் படுகின்றது.

ஹோமியோபதியின்படி வியாதி குணமடைவதற்குரிய அடிப்படைச்சட்டங்கள்:

1.உள்ளிருந்துவெளியே
- நோயை குணமாக்கும்போது சருமநோய் ஏற்பட்டுநோய்க்காரணி வெளியேறல்
- வயிற்றுப்போக்கு, கழிவகற்றல் செயன்முறைமூலம் வெளியேற்றப்படலாம்.

2.மேலிருந்து கீழே
- தோள்பட்டை நோய், விரல்களுக்கு வந்து வெளியேறல்.

3.நோய்வந்த வழியே
- நோய்கள் எந்தவரிசையில் ஏற்பட்டனவோ அதேவரிசையில் சுகமடைந்து செல்லல்.

ஆதாரம் - "ஹோமியோபதியின் தத்துவங்கள்" (Dr.மர்சியால்)

சிக்கென்ற உங்கள் உடலமைப்பிற்கு
சிக்கனமாய்ச் சிறந்த ஆடை தேட,

# சிபான் எம்போறியம்



137,வடகரை வீதி
திருக்கோணமலை



தொ.பே:026 - 22013

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு"

- திருவள்ளுவர்-

அனுசரனை - குறளமுதம்

## எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை





WESTERN JEWELLERS & CUTTING CENTRE
NO:244 ,N.C ROAD,
TRINCOMALEE.
026-20413

உங்களுக்குத்தேவையான சகலவிதமான
கட்டிடப்பொருட்களுக்கும்,

NEW GOPALAN COMPANY

28, Seaview road,

Trincomalee.

☎ :026-22619, 026-22405

fax:026-22407


## “விளக்கு” இதழ் கிடைக்கும் இடங்கள்

- 157, கடற்படைத்தள வீதி, திருக்கோணமலை.
- 34, -A கோணேசபுரம், உவர்மலை, திருக்கோணமலை.
- MILLENNIUM BOOK LAND ,186, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.


"உங்களுக்குத்
தெரிந்தவை மட்டும்
எம் தேவைகள் அல்ல.
தாக்காதவை மட்டும்
எம் தவிப்புகள் அல்ல.
உங்கள் கொள்கைகள்
எங்களுக்கல்ல.
நீங்கள்
தருவது மட்டும்தான்
உரிமை என்றல்ல."
-மு.மயூரன்-